செ.வெ.எண்:25 நாள்: 13.01.2021

# அரியலூர் மாவட்டம்
# கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணிகள் குறித்து மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோவிட்-19 பெருந்தொற்றின் தீவிர தாக்குதல்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக தமிழக அரசு மூலம் அரியலூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகள் மருத்துவப்பணியாளர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு முதற்கட்ட வழங்கும் பணிகள் தொடர்பாக மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(13.01.2021)** பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

கோவிட்-19 பெருந்தொற்றின் தீவிர தாக்குதல்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கா தீவிரமாக களப்பணியாற்றும் மருத்துவப்பணியாளர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களின் பாதுகாப்பிற்கென கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டம் அரியலூர் மாவட்டத்தில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

இதற்கென முன்னேற்பாடாக பயனாளிகளின் விபரங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கான பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, நமது மாவட்டத்தில் 2046 அரசு பணியாளர்கள், 1036 தனியார் பணியாளர்கள் என மொத்தம் 3082 நபர்களின் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், கோவிட்-19 தடுப்பு மருந்தை சரியான குளிர்ப்பதன நிலையில் பராமரிப்பதற்காக 105 லிட்டர் கொள்ளளவு உள்ள குளிர்பதனப் பெட்டி மாவட்ட அளவில் தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் 22,050 மருந்துகளை பாதுகாக்க முடியும். 0.5 மிலி கொண்ட 27,500 ஊசி குழல்கள் கோவிட்-19 தடுப்பு மருந்தை வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக மருத்தவ அலுவலர்கள் மற்றும் சுகாதாரப்பணியாளர்கள் 443 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், கோவிட்-19 தடுப்பூசி சிறப்பு முகாமினை சிறப்புடன் நடத்துவதற்கான ஒத்திகை அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, உடையார்பாளையம் அரசு மருத்துவமனை, குமிழியம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், அரியலூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ஏ.எஸ்.நர்சிங்கோம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், முதற்கட்டமாக கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணிகள் முதற்கட்டமாக அரியலூர் அரசு தலைமை மருத்துவமனை, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை, குமிழியல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், கடுகூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

கோவிட்-19 தடுப்பூசி பணிகளுக்காக தமிழக அரசிடமிருந்து அரியலூர் மாவட்டத்திற்கென வரப்பெற்ற 3324 கோவிட்-19 தடுப்பூசிகள் அனைத்தும் விளாங்குடி அரசு மருந்து குடோனில் காவல்துறையின் மூலம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தேவைப்படும் இடங்களுக்கு பாதுகாப்பான முறையில் கோவிட்-19 தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்படும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி மற்றும் மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**